

# பறவைகள்


உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

அ

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

| வரிசை எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | குருவி | 4 |
| 2 | காகம் | 6 |
| 3 | மயில் | 8 |
| 4 | கிளி | 10 |
| 5 | கழுகு | 12 |
| 6 | ஆந்தை | 14 |
| 7 | மீன்கொத்தி | 16 |
| 8 | புறா | 18 |
| 9 | தூக்கணாங்குருவி | 20 |
| 10 | கொக்கு | 22 |

# குருவி

மரங்களின் பொந்துகளிலும், கட்டிடங்களின் இடுக்குகளிலும் கூடுகளை அமைத்து வாழும்.





மனிதர்களுடன் எளிதில் பழகும் தன்மை உண்டு.

ஆண்,பெண் குருவிகள் இரண்டும் முட்டைகளைக் காத்து குட்டிகளை வளர்க்கின்றன.





துடிப்பான மற்றும் சுறுசுறுப்பான பறவை.



விதைகள், தானியங்கள் மற்றும் சிறு பூச்சிகளை உணவாக உட்கொள்ளும்.



சிறிய இறக்கைகள் விரைவான அசைவுக்கு ஏற்றதாக இருக்கும்.

மனிதர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகாமையில் அதிகம் தென்படும் பறவை.





இதன் கீச்சொலி எங்கும் சாதாரணமாகக் கேட்கக்கூடியது.

# காகம்

தன் குஞ்சுகளின் பாதுகாப்பில் மிகுந்த கவனம் செலுத்துவது இதன் தனிச்சிறப்பு.






காகத்திற்கு கருவிகளைப் பயன்படுத்தும் தனித்திறன் உண்டு.

காகம் பூச்சிகள்,பழங்கள், விதைகள்,இறந்த உயிரினங்களை உணவாக உண்கின்றன.





காகம் சமூகப் பறவை. இது கூட்டமாக வாழும் இயல்புடையது.

நகரம்,கிராமம் என எந்தச் சூழலிலும் தன்னை தகவமைத்துக் கொள்ளும் விந்தை இதற்கு உண்டு.





மற்றப் பறவைகளை ஒப்பிடுகையில் இதன் வாழ்நாள் அதிகம்.

இதன் கரடுமுரடான குரல் மற்றப் பறவைகளிடமிருந்து இதை வேறுபடுத்துகிறது.





சிலப் பண்பாடுகளில் இது நல்வாய்ப்பின் அடையாளமாகப் போற்றப்படுகிறது.

# மயில்

மயில் இந்தியாவின் தேசியப் பறவை.





மயிலின் தனித்துவமான அகவல் ஒலி எளிதில் அடையாளம் காணக்கூடியது.

ஆண் மயிலின் தோகை கண்கொள்ளாக் காட்சி அளிக்கும்.






பெண் மயில்கள் பொதுவாக சாம்பல் அல்லது பழுப்பு நிறத்தில் இருக்கும்.

மயில் வேகமாக ஓடும் ஆற்றல் பெற்றது.





காடுகள் மற்றும் புல்வெளிகளில் இதன் இருப்பு அதிகம்.

தானியங்கள், பழங்கள், பூச்சிகள் மற்றும் சிறிய ஊர்வனவற்றை உணவாக உட்கொள்ளும்.





அழகு மற்றும் கம்பீரத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது.

# கிளி



மனிதர்களின் பேச்சை பிரதிபலிக்கும் திறன் உடையது.



கிளிகள் மரப்பொந்துகளில் தங்கள் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு கூட்டமாக வாழும்.



கிளிகளில் 372 வகைகள் உள்ளன.



ஒவ்வொரு இனத்தையும் பொறுத்து இதன் ஆயுட்காலம் மாறுபடும்.

வெப்ப மண்டல மற்றும் மிதவெப்ப மண்டலப் பகுதிகளில் இவை அதிக அளவில் காணப்படுகின்றன.





கிளி கண்களைப் பறிக்கும் வண்ணங்களைக் கொண்டது.



பழங்கள், கொட்டைகள், விதைகள் மற்றும் மலர்களில் இருந்து தேனை உறிஞ்சிப் பருகும்.



கிளிகள் தங்கள் கால்களால் உணவை எடுத்து உண்ணும் திறன் கொண்டவை.

# கழுகு

பெரிய மரக்கிளைகளிலும், பாறைகளின் உச்சிகளிலும் கூடுகளை அமைத்து வாழும்.






வானில் மிக உயரமாகப் பறக்கும் ஆற்றல் உடையது.



பிணந்தின்னிக் கழுகுகள் இறந்த விலங்குகளின் உடல்களை உணவாக உட்கொள்ளும்



உணவுச் சங்கிலியின் மிக உயர்ந்த நிலையில் இதன் இடம் உள்ளது.

பரந்த இறக்கைகளும், கம்பீரமான தோற்றமும் இதற்கு ஒரு தனித்துவத்தை அளிக்கின்றன.





அரசப் பறவை என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறது.

சிறிய பாலூட்டிகள், பறவைகள், மீன்களை வேட்டையாடுவதில் வல்லமை பெற்றது.





கழுகுகளுக்கு மனிதர்களை விட 4 முதல் 8 மடங்கு வரை கூர்மையான பார்வை உண்டு.

# ஆந்தை

ஆந்தை மரங்களிலும், பாறையின் இடுக்குகளிலும் கூடுகளை அமைத்து வாழும்.





கூர்மையான பார்வையும், கேட்கும் திறனும் இதற்கு அதிகம்.

ஆந்தையின் தனித்துவமான அலறல் ஒலி இரவில் கேட்கும்.



இரையை நெருங்கும்போது எந்தவித ஒலியும் எழுப்பாமல் பறக்கும் திறன் கொண்டது.



ஆந்தை பல்வேறு வகையான இனங்களைக் கொண்டது.





தன் தலையை 270 டிகிரி வரை சுழற்றும் வியக்கத்தக்க திறன் உடையது.

ஆந்தை இரவு நேரங்களில் சுறுசுறுப்பாக வேட்டையாடும் பறவை.





ஆந்தைகள் சிறிய பாலூட்டிகள், பூச்சிகள் மற்றும் பிற பறவைகளை வேட்டையாடுகின்றன.

# மீன் கொத்தி

ஆற்றங்கரை மண்ணில் துளையிட்டு கூடுகளை உருவாக்கும் பழக்கம் உடையது.





மீன்கொத்தி தனித்தோ அல்லது சிறிய குழுவாகவோ காணப்படும்.

மீன்களைப் பிடிப்பதில் திறமை வாய்ந்த பறவை.





கண்ணைக் கவரும் நீல மற்றும் பச்சை நிறங்களில் உள்ள பறவை.

நீர் மாசுபாடு இதன் வாழ்விடத்தை கடுமையாகப் பாதிக்கலாம்.





மீன்கொத்தி பல்லி, நத்தை, தவளை போன்றவற்றை உணவாக உண்ணும்.




மீன்கொத்திகள் அண்டார்டிக்காவைத் தவிர உலகின் அனைத்துக் கண்டங்களிலும் காணப்படுகின்றன.



மீன்கொத்திக்கு வேகமாகப் பறக்கும் திறன் உண்டு.

# புறா

நகரங்களிலும், கிராமங்களிலும் அதிகமாகக் காணப்படும் அமைதியான பறவை.






முற்காலத்தில் தகவல்களை எடுத்துச் செல்லும் தூதுவனாகப் பயன்படுத்தப்பட்டது.

புறா மிக வேகமாகப் பறக்கும் திறன் உடையது.





மனிதர்களுடன் எளிதில் பழகும் தன்மை இதற்கு உண்டு.

புறா கூட்டமாக, கட்டிடங்களின் இடுக்குகளில் கூடுகளை அமைத்து வாழும்.





தானியங்கள், விதைகள் மற்றும் பழங்களை விரும்பி உண்ணும்.

புறாக்களுக்குத் திசையறியும் திறன் உள்ளது.





தங்கள் முட்டைகள் மற்றும் குஞ்சுகளைப் பராமரிப்பதில் மிகவும் அக்கறை கொண்டவை.

# தூக்கணாங்குருவி

சிக்கலான, தொங்கும் கூடுகளை உருவாக்கும் தனித்துவமான திறனுக்காகப் பெயர் பெற்றது.





ஆண் பறவைகள் மட்டுமே கூடுகளைக் கட்டும் வியக்கத்தக்க பண்பு உடையது.



வயல்வெளிகள் மற்றும் திறந்தவெளிகளில் இதன் இருப்பு அதிகம்.



இனிமையான கீச்சொலி உடையது.

பெரும்பாலும் பனை மரங்கள் அல்லது உயரமான மரங்களில் தொங்கும் கூடுகளைக் கட்டுகின்றன.





மற்றப் பறவைகளுடன் இணைந்து வாழும் சமூகப் பண்பு உடையது.

விதைகள், தானியங்கள் மற்றும் சிறு பூச்சிகளை உணவாக உட்கொள்ளும்.





தூக்கணாங்குருவி கூடுகள் பொதுவாக பல அறைகளைக் கொண்டிருக்கும்.



www.worldtamilacademy.com

# கொக்கு

மரக்கிளைகளிலோ அல்லது தரையிலோ பெரிய கூடுகளை அமைத்து வாழும்.





நீண்ட கால்களையும், நீண்ட கழுத்தையும் உடைய நீர்வாழ் பறவை.



வானில் கம்பீரமாகப் பறக்கும் திறன் உடையது.




ஆற்றங்கரைகள், ஏரிகள் மற்றும் சதுப்பு நிலங்களில் இதன் இருப்பு அதிகம்.



www.worldtamilacademy.com

சில சமயங்களில் கூட்டமாகவும், சில சமயங்களில் தனித்தும் காணப்படும்.





மீன்கள், தவளைகள் மற்றும் சிறிய பாலூட்டிகளை உணவாக உட்கொள்ளும்.



நீர் மாசுபாடு இதன் வாழ்விடத்தை கடுமையாகப் பாதிக்கலாம்.



பொறுமையாகக் காத்திருந்து இரையை வேட்டையாடும் பழக்கம் உடையது.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com